Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 • இதழ் Issue : 87 • புதன்கிழமை Wednesday • 28.01.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

# கருப்பைவாய் புற்றுநோயை தடுக்க பள்ளி மாணவிகளுக்கு தடுப்பூசி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



சென்னை: கருப்பைவாய் புற்றுநோயை தடுத்திடும் வகையில் 30 ஆயிரம் பள்ளி மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்புஇயக்கத்தின்செயல் திட்ட ஆவணத்தை வெளியிட்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில், ஆறு நோய்களை தடுப்பதற்கான விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசி திட்டம் 1978-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் 1985-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தடுப்பூசி திட்டத்தின் கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும்அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 லட்சம் பெண்களுக்கு கருப்பைவாய்ப் புற்றுநோய் புதிதாககண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு வருகிறது. ஹெச்.பி.வி வைரஸ் (HPV - Human Papilloma Virus) தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பைவாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதின் மூலம் தடுக்க இயலும்.

HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல்: தமிழ்நாடு அரசின் 2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கருப்பைவாய் புற்றுநோயை தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும் HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென 2025 – 26 ஆம் ஆண்டில் 36 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, தடுப்பூசி திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக (Pilot phase) கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் உள்ள எஞ்சிய மாவட்டங்களில் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி செலுத்தப்படும்.

தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்க செயல்திட்ட ஆவணம் வெளியீடு (Tamil Nadu Cancer Care Mission): புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பை மேம்படுத்த தமிழ்நாடு அரசு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டமைப்பு மேம்பாடு, ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல், மற்றும் மேம்பட்ட சிகிச்சை வழங்குதல் உட்பட பல்வேறு அம்சங்கள் இதில் அடங்கும்.

புற்றுநோய் என்பது மக்களின் நலத்திற்கு பெரும் தீங்காக இருந்து வருகிறது. குறிப்பாக, வாழ்க்கைமுறை சார்ந்த மாற்றங்களால் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரித்து வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான அணுகுமுறையை செயல்படுத்துவது அவசியமாகிறது.


தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கமானது நோய் தடுப்பு, ஆரம்பநிலையில் கண்டறிதல், நோயறிதல், சிகிச்சை, வலி நிவாரண சிகிச்சை நீடித்த மற்றும் தரமான வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கி, விரிவுபடுத்தி புற்றுநோயால் ஏற்படும் முன்கூட்டியே நிகழும் இறப்புகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த இந்த இயக்கத்தில், மேம்பட்ட தொழில்நுட்பங்கள், சமூகப் பங்களிப்பு மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி ஆகியவற்றைப் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புற்றுநோய் தாக்கத்தை குறைப்பதை நோக்கமாகக்கொண்ட இந்த புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் மூலம் வரும் 5 ஆண்டுகளில் பலதொலைநோக்கு மற்றும் புதுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை முதல்வர் ஸ்டாலின் இன்றையதினம் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைஅமைச்சர்மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்தியா ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தகம்; 96 சதவீதம் பொருள்களுக்கு வரி குறைத்த இந்தியா!



புது டெல்லி: இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனை பிரதமர் நரேந்திர மோடி முறைப்படி அறிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் அன்டோனியோ கோஸ்டாவும், பிரதமர் மோடியும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்தியா – ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடைய வர்த்தக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிறகு பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கையில், இன்று இந்தியா தனது வரலாற்றில் மிகப் பெரிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முடித்துள்ளது. 213 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள உலகின் மிகப் பெரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இதன்கீழ் மக்களுக்கு உதவும் பல முடிவுகளை நாங்கள் எடுத்துள்ளோம். இந்தியா – ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக ஒப்பந்தம் பரஸ்பர வளர்ச்சிக்கான ஒரு வரைபடமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தில் வாழும் எட்டு லட்சம் இந்தியர்கள் பெரிதும் பயனடைவார்கள். இன்று ஜனவரி 27, இந்த நாளில்,ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளுடன் இந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது மகிழ்ச்சியான தற்செயல் நிகழ்வு. இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு உலகளாவிய நன்மைக்கான ஒரு கூட்டாண்மை" என்று பிரதமர் மோடி கூறினார்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் பேசிய ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா, "இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் நம்பகமான கூட்டாளர்களாக ஒன்றிணைகின்றன. அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை செயல்படுத்தும் வகையில் எங்கள் கூட்டாண்மையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்கிறோம்.

இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் ஆகும். இன்றைய தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஐரோப்பாவுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அமைதி, உரையாடல் ஆகியவற்றிற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு நாங்கள் பிரதமர் மோடியை நம்புகிறோம்.

மேலும், உலகளாவிய பிரச்சினைகளில் ஒன்றாக நாம் தலைமைத்துவத்தைக் காட்ட வேண்டும். காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல் மற்றும் புதைபடிவ எரிபொருட்களிலிருந்து பசுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுதல் போன்ற துறைகளில் இந்தியா அதிக ஒத்துழைப்பு வழங்கவேண்டும்" என்றார்.

வெளிநாட்டு கார்களுக்கு தற்போது 70 முதல் 110 சதவீதம் வரை வரி விதிக்கப்படுகிறது. தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அமலுக்கு வரும்போது, இறக்குமதி வரியை 40% குறைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் பிஎம்டபிள்யூ, மெர்சிடஸ் பென்ஸ், வோக்ஸ் வேகன், ரெனால்ட் போன்ற ஐரோப்பிய நிறுவனங்களின் கார் விலை குறையும்.

எனினும், இதில் மின் சாரவாகனங்கள் முதல் 5 ஆண்டுகளுக்கு சேர்க்கப்படாது. டாடா மோட்டார், மகிந்திரா போன்ற உள்நாட்டு நிறுவனங்கள் மின்சார கார் திட்டத்தில் அதிகம் முதலீடு செய்துள்ளன. இது பாதிப்படையும் என்பதால் 5 ஆண்டுகளுக்கு பின்பு வெளிநாட்டு மின்சார கார்களுக்கும் வரி குறைக்கப்படும். இந்தியாவில் ஆண்டுக்கு 44 லட்சம் கார்கள் விற்பனையாகின்றன. இதில் வெளிநாட்டு கார்களின் பங்கு 4 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க. கூட்டணிக்கு செல்லாதது ஏன்?

## டி.டி.வி. தினகரன் பரபரப்பு விளக்கம்



மதுரை,

மதுரையில் செய்தியாளர்கள் சந்திப்பில் அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் பேசியதாவது:-

த.வெ.க.வுக்கு வருவேன் என்று கே.ஏ.செங்கோட்டையன் நம்பினார்.அவர்என்னை அழைத்தபோது நட்பின் காரணமாக உடனடியாக நான் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. பார்ப்போம் என்று கூறினேன். அதிமுகவை ஊழல் கட்சி என்று சொல்லும் விஜய், அதிமுகவில் இருந்து வெளியில் வந்த செங்கோட்டையனை சேர்த்துக் கொண்டுள்ளார். இது என்ன stand என எனக்குப் புரியவில்லை.நான் அதிமுக கூட்டணிக்கு செல்ல மாட்டேன் என செங்கோட்டையன் நம்பிக் கொண்டிருந்தார்

அம்மா ஆட்சி மீண்டும் தொடர வேண்டும் என நட்பு ரீதியாக அதிமுகவினர் அழைத்தனர். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அமமுக தங்கள் கூட்டணியில் வர வேண்டும் என விருப்பப்பட்டார்.

அரசியல் என்பது சதி நிறைந்த துறை. நான் ஜெயலலிதாவால் அரசியலுக்கு வந்தவன்.ஜெயலலிதா ஆட்சி மீண்டும் வரவேண்டும் என்பதற்காகத்தான் அ.தி.மு.க. கூட்டணிக்கு சென்றேன். ஓ.பி.எஸ். ஆதரவு எம்.எல்.ஏ. அய்யப்பன் என்னைசந்தித்தார்.அரசியல் ரீதியாக வரவில்லை. எனக்கு நல்ல நண்பர். மீண்டும் வந்து சந்திப்பதாக கூறிச் சென்றிருக்கிறார். 3 முறை முதல்- அமைச்சராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் எப்படி தி.மு.க.வுக்கு செல்வார். திமுக எப்படி எங்களுக்கு சரி வரும்? அதிமுகவால், ஜெயலலிதாவால் வளர்க்கப்பட்டவர்கள் நாங்கள்.

எனக்கு யாரும் அழுத்தம் தர முடியாது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வர வேண்டும் என்பதே ஒரே இலக்கு. என்னால் ஒருபோதும் தி.மு.க.வுக்கு போக முடியாது. அ.தி.மு.க.வால், ஜெயலலிதாவால் வளர்க்கப்பட்டவர்கள் நாங்கள். அப்படி இருக்கும்போது தி.மு.க. எப்படி எங்களுக்கு சரிவரும். ஜெயலலிதா ஆட்சி அமைய ஓபிஎஸ் எங்களுடன் இருக்க வேண்டும்என்பதுஎனது விருப்பம்.

அமைச்சரவையில் இடம் கிடைக்க வேண்டும்என்பது எனது ஆசை மட்டுமே. நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை. ஆனால் கூட்டணி ஆட்சி சாத்தியம் இல்லை எனச் சொல்ல முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற பொன்னான வார்த்தைகளை உலகிற்கு வழங்கிய கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊரான மகிபாலன்பட்டி அரசு மேல்நிலை பள்ளியில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் மாணவிகள் குடியரசு தினம் உருவானது குறித்தும், டாக்டர் அம்பேத்கர் சட்டம் இயற்றியது குறித்தும் உரையாற்றினர். முன்னதாக இப்பள்ளியின் தமிழ் ஆசிரியர், தேசியக் கொடி வண்ணங்களை மாணவர்கள் ஞாபகம் வைத்துக் கொள்ளும் வண்ணம் நகைச்சுவையாக கூறிய எடுத்துக்காட்டு அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. சாப்பிடும் வாழை இலை பச்சை, அது கீழே இருக்கும், அதன் மேல் வைக்கும் சாப்பாடு வெள்ளை, அது நடுவில் இருக்கும், அதன் மேல் ஊற்றப்படும் குழம்பு காவி நிறம், அது மேலே இருக்கும் எனவும் கூறி அசத்தினார். தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர்களும்,பலலட்சம்மரக்கன்றுகளைநட்டுவைத்தஇளைஞர்களானஇரட்டையர்கள் ராமநாதன் லட்சுமணன் இப்பள்ளிக்கும், மாணவர்களுக்கும் மரக்கன்றுகளை வழங்கினர். மேலும் பசுமையான இந்தியாவை உருவாக்க இந்த 77வது குடியரசு தினத்தில் உறுதி ஏற்போம் என்றும் தெரிவித்தார்.

# திருப்பத்தூர் தாலுகாவில் தமிழக மக்கள் உரிமை கழகத்தின் உறுப்பினர் சேர்க்கை இலவச மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது





இந்திய திருநாட்டின் 77-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவில் தமிழக மக்கள்உரிமைகளத்தின் மாநில ஆன்மீக அணி துணைச் செயலாளர் ஜெய் கணேஷ், சிவகங்கை வடக்கு மாவட்ட செயலாளர் சிவராஜ்,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் ஷர்புதீன் மற்றும் வழக்கறிஞர் முகமதுசெரிப்ஆகியோர் முன்னேற்பாட்டிலும், தமிழக மக்கள் உரிமை கழகத்தின் நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் மணிவண்ணன் முன்னிலையிலும் "உறுப்பினர் சேர்க்கை" நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. மேலும் அப்பகுதியில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் உள்ள சுமார் 21 மாணவர்களுக்கு தமிழகமக்கள் உரிமைக் களத்தின் நிர்வாகிகள் சார்பாக இரவு உணவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் தமிழக மக்கள் உரிமை கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் செயின்ட் மரியம் பாலிடெக்னிக் கல்லூரியில் 77வது குடியரசு தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் தாளாளர் வினித்தம்பி தேசியக்கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செய்தார். இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர் பழனிவேல் குமார், மற்றும் துறை தலைவர்கள் சுந்தர் கணேஷ், பேராசிரியர்கள், மற்றும் கந்தசாமி, பாலாஜி, சக்திவேல்முருகன், மாணவ மாணவிகள், அலுவலக பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு காலணி மற்றும் கால் உரைகள் வழங்கும் விழா நடைபெற்றது விழாவிற்கு தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி அனைவரையும் வரவேற்றார். காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள புலியடிதம்பத்திற்கு அருகிலுள்ள கருவிக்கண்மாய் ஊரைச் சேர்ந்த ஜப்பான் NITCO டெக்னாலஜிஸ் நிறுவுனர் பிரபு அனைத்து மாணவ மாணவிகளுக்கும் தன்னுடைய சொந்த செலவில் ரூபாய் 70000 மதிப்புள்ள காலணி மற்றும் இரண்டு இணை காலுறைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மாணவ மாணவிகள் ஷூ பெற்றுக்கொண்டு தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சண்முகசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியைகள் கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவி சமையலாளர் அஞ்சலை கஸ்தூரி கலந்துகொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் சிவகங்கையில் உள்ள ஜிஎன்எஸ் ஒருங்கிணைந்த ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லத்தில் இந்திய திருநாட்டின் 77வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இதில் பொதுச்செயலாளர் அ. உருமத்தான் இந்திய தேசிய மூவர்ணகொடியேற்றி,இனிப்புகள்வழங்கி,குடியரசுதினவாழ்த்துக்களைஅனைவருக்கும் தெரிவித்தார். இவ்விழாவில் இயக்குனர் உ. மகாலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். ஆர். அண்ணாலெட்சுமி நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் குழந்தைகள், மாணவர்கள், முதியோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் தென்காசி வட்டாரத்தில் குடியிருப்பு பரூக் தொடக்கப்பள்ளியில் வைத்து நடைபெற்ற சிறப்பு பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில பொதுச் செயலாளர் மயில் அவர்களுக்கு தென்காசி வட்டாரத்தின் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தென்காசி வட்டார கிளையின் நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் நடைபெற்ற

# 77வது குடியரசு தின விழாவில் மேயர் ஜெகன் பெரியசாமி 100 அடி உயர மின்கம்பத்தில் தேசிய கொடியேற்றிவைத்து மரியாதை செலுத்தினார்





தூத்துக்குடி மாநகராட்சியில் 2025-26ம் ஆண்டில் பணியாற்றிய பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலா்கள், பொதுமக்களிடையே தேசிய வாக்காளர் தின நாளை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கோலமிடும் பணிகளை சிறப்பாக மேற்கொண்ட நகர்புற வாழ்வாதார மைய பணியாளர்கள் மாநகராட்சி வளர்ச்சியில் பங்கெடுத்த தன்னாா்வலா்கள் உள்பட 98 பேருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். விழாவில் மேயா் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: வெள்ளைக்காரனைஎதிர்த்துசுதந்திரம் அடைந்தோம். பின்னர் குடியரசுதினத்தைமுன்னாள் முதலமைச்சர் கலைஞர் கொடியேற்றும்உரிமையைபெற்றுக் கொடுத்தார்.தூத்துக்குடி மாநகராட்சியில் தமிழக முதலமைச்சர்ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க பொறுப்பேற்ற காலத்தில் இருந்த நெருக்கடிகள் இன்னல்கள் எல்லாவற்றையும் கடந்து மூன்றுரை வருடத்தையும் கடந்து விட்டோம். எந்த பக்கம் சென்றாலும் கோரிக்கைகள் குறைபாடுகள் என்றமக்களின் எதிா்பாா்புகளுக்கு மத்தியில் கடந்த காலத்தில் பெய்த கனமழையின் போது மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் அப்பகுதியில் தண்ணீர் தேங்க கூடாது. என்று முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க நாம் அனைவரும் இணைந்து பணியாற்றினோம். உங்களுக்கு வழிகாட்டியாக முதலமைச்சர்ஸ்டாலின் மற்றும் கனிமொழி எம்.பி,அமைச்சர்கள் கீதாஜீவன், நேரு, மற்றும் பல அமைச்சர்கள், கலெக்டர், உள்ளிட்ட உயர் அதிகாரிகள் முழுமையாக இருந்து பணியாற்றினார்கள். 2022, 2023, 2024 காலக்கட்டத்தில் மழை காலங்களில் தேசிய நெடுஞ்சாலைகளிலும்நான்குஅடிதண்ணீர் இருந்த நிலையில் அதை கடந்து தான் ஊருக்குள் தண்ணீர் வந்தும் பாதிப்பு ஏற்படுத்தியது. ஆனால் ஆணையர் மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதில் முன்னோடியாக இருந்து ஒத்துழைப்பு வழங்கி வந்ததின் காரணமாக காற்றாட்டு வெள்ளம் ஊருக்குள் வருவதை நாம் தடுத்துவிட்டோம் கடந்த அதிமுக ஆட்சியில் மழை பெய்தால் சுமாா் 45 நாட்கள் வரை பல இடங்களில் தேங்கி நிற்கும் ஆனால் திமுக அரசு பொறுப்பேற்ற பிறகுபுதிதாக14வழித்தடங்கள் ஏற்படுத்தியதின் காரணமாகவும் பக்கிள் ஓடையின் மூலமாகவும் கடலுக்கு செல்வதால் அந்த பாதிப்பு இல்லாத நிலை இருக்கிறது.2 16 17 ஆகிய பகுதிகளில் மட்டும் தான் தண்ணீர் தேங்கும் இப்போது 10 செமீ மழை பெய்தாலும் இரண்டு மணி நேரத்தில் அனைத்தும்வழிந்தோடி விடும். தருவைகுளம் குப்பைக் கிடங்கு பகுதியில் உள்ள 578 ஏக்கா் இசி ஆர் சாலை சென்றால் சில சமயங்களில் ஊா் நாற்றங்கள் வரக்கூடும்.அதில் 300 ஏக்கா் மரக்கன்றுகள் நடப்பட்டு கழிவு நீா் சுத்தகரிக்கப்பட்டு பராமாிப்பதால் பூஞ்சோலையாக மாறி இருக்கிறது.மேலும்100ஏக்காில் மரக்கன்றுகள் நடும் திட்டமும் கவனத்தில் இருக்கிறது. வீட்டுக்கொரு மரம் வளர்த்து சுகாதாரத்துடன் மாசு இல்லாத மாநகரை உருவாக்க வேண்டும். தினசரி 180 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு 120டன்தரம்பிரிக்கப்பட்ட மற்ற சிலவற்றை தனியாருக்கு எலக்ட்ரிக் சம்பந்தப்பட்ட உபயோகத்திற்கு வழங்கப்படுகிறது. இப்படி பல்வேறு திட்டங்களை தொடா்ந்து மக்களுக்காக செய்து வரும் நிலையில் நான்கு மண்டலங்களிலும் குறைதீா்க்கும் முகாம் நடத்தி வருவதின் மூலம் மக்கள் மகிழ்ச்சியடைகின்றன.

# இலவச பேருந்துகளை திருவண்ணாமலைக்கு சிறப்பு பேருந்து என்று இயக்கி கட்டணம் வசூல்



கிருஷ்ணகிரி மாவட்டம் சேலம் கோட்டம் தர்மபுரி உட்கோட்டம் கிருஷ்ணகிரி பணிமனைக்கு உட்பட்ட அரசு இலவச பேருந்துகள் திருவண்ணாமலையை நோக்கி செல்வது ஏன் பெண்கள் கேள்வி கேட்டு வருகின்றனர்உதாரணமாக தமிழக அரசு மகளிர்கென்று இலவச அரசு பேருந்துகள் அறிவிக்கப்பட்டு பெண்கள் இலவசமாக பயணம் செய்து கொள்ளலாம் என்று அறிவித்துள்ளது ஆனால்இந்தபேருந்துகள்மகளிரைஏற்றுக்கொண்டு அறிவிக்கப்பட்ட வழித்தடத்தில் இயக்காமல் சிறப்பு பேருந்து என்று திருவண்ணாமலைக்கு செல்வது வழக்கமாக கொண்டுள்ளனர் இதனால் சொந்த ஊர்களுக்கு பெண்கள் இலவச பேருந்து நம்பி காத்திருந்து ஏமாற்றம் அடைகிறார்கள் திருவண்ணாமலைக்கு கிருஷ்ணகிரி பணிமனையின் கீழ் இயங்கும் கிருஷ்ணகிரி பணிமனை ஓசூர் பணிமனை தேன்கனிக்கோட்டை பனிமனை பாலக்கோடு பணிமனை அரூர் பணிமனை ஊத்தங்கரை பணிமனை ஆகிய பணிமனையில்இருந்து மாற்று வழித்தடத்தில் இயங்கும் பேருந்துகளை கூட கிருஷ்ணகிரியில் இருந்து திருவண்ணாமலைக்கு அனுப்பி விடுகின்றனர் இதனால் கிருஷ்ணகிரியில் இருந்து ஓசூர் பெங்களூர் செல்பவர் மிகவும் அவதிப்படுகிறார்கள் மேலும் மேற்குறிப்பிட்ட பணிமனைகளில் இருந்து அதிக பேருந்துகளை அரசிடம் வாங்கிக் கொண்டு முறையான வழித்தடத்தில் இயக்காமல் குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும் அதிக பேருந்துகள் இயக்கி வருகின்றனர் இதைப்பற்றி சமூக ஆர்வலர்கள் அதிகாரிகளிடம் கேட்டால்நாங்கள்சிறப்புபேருந்துகள்இயக்குகிறோம் என்று பதில் கூறுகிறார்கள் மேலும் அரசு பொங்கல் தீபாவளி போன்ற பண்டிகை காலங்களில் தான் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சிறப்பு பேருந்து என்று முழுமையாக அறிவித்துவிட்டு இயக்குகிறார்கள்ஆனால்மேற்குறிப்பிட்டபணிமனை பேருந்துகள் நாள் ஒன்றுக்கு சுமார்100க்கு மேற்பட்ட பேருந்துகளைசிறப்பு பேருந்து என்று இயக்குகிறார்கள் இதனால் அந்த வழித்தடத்தில் இருக்கும் பயணிகள் இந்த பேருந்துகளை நம்பி ஏமாற்றம் அடைவதே மிச்சம் என்று கருத்து தெரிவித்து வருகின்றனர் மேலும் பேருந்துகளுக்காக அரசு பல்லாயிரம் கோடி செலவு செய்யும் அரசு இத்துறை நஷ்டத்தில்தான் இயங்கி வருகிறது எனவே புதியபேருந்துகளைவாங்குவதைஅரசுநிறுத்திவிட்டு அந்த பேருந்து வாங்கும் நிதியை அரசு மருத்துவமனையோ அல்லது அரசு பள்ளிகளோ கலைக்கல்லூரிகளோ போன்றவற்றை உருவாக்கினால் இளைஞர்களின் எதிர்காலம் மிகவும்சிறப்பாகஇருக்கும்என்றுபொதுமக்கள்கூறி வருகின்றனர் எனவே முறையான வழிதடத்தில் இயக்காத பேருந்துகளை தமிழக அரசு சேலம் கோட்டத்திற்குஉட்பட்டஅனைத்துபணிபணிகளிலும் வரவு செலவு பட்டியலை உளவுத்துறை மூலம் அறிய வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்து வருகின்றனர் இதை நிறைவேற்றுமா தமிழகஅரசு.

# வங்கி ஊழியர்கள் ஒருநாள் வேலைநிறுத்தம்: நாடு முழுவதும் சேவை முடங்கியதால் மக்கள் அவதி



வாரத்துக்கு 5 நாட்கள் மட்டுமே வேலைநாட்களாக அறிவிக்கக் கோரி, நாடு முழுவதும் இன்று வங்கி ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வங்கி சேவைகள் முடங்கியதன் காரணமாக பொதுமக்கள் அவதியுற்றனர். வாரத்துக்கு 5 நாட்கள் மட்டுமே வேலைநாட்களாக அறிவிக்கக் கோரும் இந்தப் போராட்டத்தில் இந்தியாவில் உள்ள பொதுத்துறை,தனியார்வங்கிகள்,கிராமப்புற,கூட்டுறவு வங்கிகள் என ஒட்டுமொத்தமாக 8 லட்சம் ஊழியர்கள் பங்கேற்றனர். கடந்த 24-ம் தேதி (4-வது சனி) மற்றும் ஞாயிறு விடுமுறையைத் தொடர்ந்து 26-ம் தேதி குடியரசு தினத்துக்கும் வங்கிகள் திறக்கப்படவில்லை. இந்நிலையில் தொடர்ந்து 4-வது நாளாக இன்று வேலைநிறுத்தம் காரணமாக பல்வேறு வங்கிகளில் ஊழியர்கள் இல்லாமல் வங்கி சேவைகள் முடங்கின. பண பரிவர்த்தனையும் பாதிக்கப்பட்டது. இதனால் வாடிக்கையாளர்கள் பெரிதும் அவதியுற்ற னர். சென்னையில் பிராட்வே பிரகாசம் சாலையில் உள்ள யூனியன் வங்கி முன்பு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம் உள்ளிட்ட சங்கங்களின் சார்பில் வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இதில் 2,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



உலக வாக்காளர் தினம் என்பதால் தாம்பரம் அருகே உள்ள சாய்ராம் பொறியியல் கல்லூரியில் 500க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்றும்,வாக்கு தங்களின் உரிமை, காசு வாங்க கூடாது என்றும் ,அதேநேரத்தில்முதல்வாக்காளர்கள்கண்டிப்பாகவாக்களிக்கவேண்டும்எனகல்லூரியில் இருந்து பேரணியாக இரண்டு கிலோமீட்டர் தூரம் சென்று கல்லூரியில் முடித்தனர். இந்த பேரணியை வருவாய் கோட்டாட்சியர் பாலாஜி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

## பண்டாரம்பட்டி தொடக்கப்பள்ளியில் 77வது குடியரசுதின விழா; வழக்கறிஞர் ரமேஷ் பாண்டியன் தேசியக் கொடியை ஏற்றி தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி மாநகராட்சி, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி,பண்டாரம்பட்டியில்செயல்பட்டு வரும் TNDTA தொடக்கப் பள்ளியில் 77வது குடியரசு தின விழா நேற்று பள்ளி வளாகத்தில்சிறப்பாககொண்டாடப்பட்டது.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வழக்கறிஞர் ரமேஷ் பாண்டியன் தேசியக்கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின விழாவை தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் நெல்சன் பொன்ராஜ் தலைமை வகித்தார். ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் இணைந்து தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர். தொடர்ந்து குடியரசு தினத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடையே உரைகள் நிகழ்த்தப்பட்டு, மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

கல்வித் துறையில் சிறப்பான சேவை புரிந்ததற்காக மாநில அளவிலான விருதுகளை பெற்று,பள்ளி மாணவர்களை விமானப் பயணத்திற்கு அழைத்துச் சென்ற பெருமைக்குரியவருமான தலைமை ஆசிரியர் நெல்சன் பொன்ராஜின் சேவை அனைவராலும் பாராட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல உரிமைஅமைப்பாளர் அருணாதேவி, ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் 77வது குடியரசுத் தின விழாவில் மேற்கு மண்டல தலைவி அன்னலெட்சுமி தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி தூத்துக்குடி மாநகரை தூய்மையாக வைப்போம் என்று உறுதிமொழி ஏற்றனர். விழாவில் உதவி ஆணையர், மாநகராட்சி அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கோட்டு ராஜா, இசக்கி ராஜா மற்றும் பொதுமக்கள்திரளாக கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## தூத்துக்குடியில் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு

# மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்

தூத்துக்குடியில் மாவட்ட நிர்வாகம் சார்பில் 77வது குடியரசு தின விழா தருவை மைதானம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் கக. இளம்பகவத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் முன்னிலையில் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர் அமைதியையும், சமாதானத்தையும் வலியுறுத்தும் விதமாக வென்புறாக்கள் பறக்கவிடப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், காவல் துறை மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த 440 அரசு அலுவலர்களுக்கு சிறப்பாக பணிபுரிந்தமைக்கு நற்சான்றிதழ்கள் வழங்கினார். முன்னதாக சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை உயர் அதிகாரிகள் 111 பேருக்கு முதல்வரின் பதக்கங்களும், சான்றிதழையும் வழங்கினார். மேலும் 33 துறைகளின் சார்பில் 38 பயனளிகளுக்கு 2 கோடியே 13 லட்சத்து 25 ஆயிரத்து 922 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்கள் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் பள்ளி மாணவ மாணவிகள் 2500 பேர் கலந்து கொண்ட கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிச்சந்திரன், பயிற்சி ஆட்சியர் புவனேஷ் ராம், சமூக நல அலுவலர் உஷா, மாற்றுத் திறனாளிகள் அலுவலர் பிரம்ம நாயகம், தூத்துக்குடி கோட்டாட்சியர் பிரபு, கோவில்பட்டிசப்கலெக்டர் ஹிமான் சுமன் ஹில், ஆதிதிராவிடர் நல அலுவலர் சூரிய பெனிட்டிக், மக்கள் தொடர்பு அலுவலர் நவீன்பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் திண்டல், வேளாளர் மகளிர் கல்லூரியில் சேர்ந்த 1,593 மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாணவ, மாணவியர்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டினைமுன்மாதிரி மாநிலமாக உயர்த்தி உள்ளார்கள். அந்த வகையில் உலகம் உங்கள் கையில் திட்டத்தில் கீழ் 10 லட்சம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை 08.01.2026 அன்று சென்னையில் துவக்கி வைத்தார். ஈரோடு மாவட்டத்தில் இதுவரை10,500மடிக்கணினிகள் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மடிக்கணினியானது அவர்களின் கல்விக்கு பயன்படும் வகையில் இருக்கும். பள்ளியில் மாணவ, மாணவியர்கள் இடைநிற்றலை தவிர்த்து அவர்கள் தொடர்ந்து, சோர்வின்றி கல்வி பயில முதலமைச்சரின் காலை உணவு திட்டம். உயர்கல்வி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களை எதிர்காலம் சமுதாயத்தினர் பயன்பெறும் வகையில்சிறப்புடன்செயல்படுத்தி வருகிறார்.

மேலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, சிவகிரியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் அரசுசிக்கய்ய கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறு விளையாட்டு அரங்கம். மிகப்பெரிய நூலகம், போட்டித்தேர்வுகளுக்கு பயில பயிற்சி மையம் ஆகியவையும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வெள்ளோடு பகுதியில் காளிங்கராயன்அவர்களின் சிலையுடன் சிறிய நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகத்தில் போட்டித் தேர்வுகளுக்கும் மற்ற தேர்வுகளுக்கும் பயிலும் வகையில் புத்தகங்கள் வைக்கப்படவுள்ளது. இதனை மாணவ, மாணவியர்கள்பயன்படுத்திக் கொண்டு ஆசிரியர்கள் பெருமைப்படும் அளவில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

நேற்றைய தினம் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் 1,593 கல்லூரி மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.





இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ், மண்டல குழுத்தலைவர்கள். (2-மண்டலம்) சுப்பிரமணியம், (3-ம் மண்டலம்) சசிக்குமார்,திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரி முதல்வர் சந்திரசேகர். உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேசப்பற்றையும்,உடல் வலிமை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஈரோட்டில் ஐஃபிட் கிளப் 100 உறுப்பினர்கள் 26 கி.மீ தூரம் நமது மூவர்ண தேசியக் கொடியை ஏந்தித் தொடர் ஓட்டம்

இந்தியா 1947-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றாலும், இந்திய மக்களுக்கென ஒரு அரசியலமைப்புச் சட்டம் தேவைப்பட்டது. இதற்காக நவம்பர் 1946-இல் அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது. இதன் முதல் கூட்டம் 9 டிசம்பர் 1946-இல் நடைபெற்றது. 2 ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாட்கள் விவாதித்து இந்திய அரசியலமைப்பை உருவாக்கியது.

இதன் நிரந்தரத் தலைவராக டாக்டர் ராஜேந்திர பிரசாத் மற்றும் வரைவுக் குழுத் தலைவராக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் செயல்பட்டனர்.

26 நவம்பர் 1949 அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்த நாள்: 26 ஜனவரி 1950. இந்த நாளை ஒவ்வொரு ஆண்டும் நாம் குடியரசு நாளாகக் கொண்டாடுகிறோம்.



இதை வலியுறுத்தி பொதுமக்கள் விழிப்புணர்வுக்காக இந்தியா தனது 76-வது குடியரசைத் தழுவும் வேளையில், உடல் வலிமையை வலியுறுத்தியும் மற்றும்குடியரசுநாளைப் போற்றியும் (26.1.2026 ) அன்று ஈரோட்டில் ஐ-ஃபிட் கிளப் உறுப்பினர்கள் (100 உறுப்பினர்கள்)அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பித்து 26 கி.மீதூரம்நமதுமூவர்ண தேசியக் கொடியை ஏந்தித் தொடர் ஓட்டம் ஓடினர்.இந்தத் தொடர் ஓட்டத்தை ஐ - ஃபிட் கிளப் நிர்வாகிகள் முன்னின்று ஏற்பாடு செய்தனர்.

## அகிலி பரத்வே நிறுவனங்களில் குடியரசு தின விழா கொண்டாட்டம்



அகிலி பரத்வே நிறுவனங்களில் குடியரசு தின விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. பாத்வே மெட்ரிகுலேஷன் பள்ளி, குழந்தைகள் இல்லம் மற்றும்

பாத்வே சபின் மையம் ஆகியவை இணைந்து 77-வது குடியரசு தினத்தைமிகுந்த உற்சாகமும் நாட்டுப்பற்றும் கொண்டு கொண்டாடினர்.

இவ்விழாவிற்கு பாத்வே அறங்காவலர் ஷாந்த் ஜெயின் தலைமை தாங்கி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, குழந்தைகளின் குடியரசு தின அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்.

பாத்வே இயக்குநரும் முதன்மை செயற்பாட்டாளருமான டாக்டர் சந்திரபிரசாத், தலைவர்

துலிபட்நாயக் மற்றும் அறங்காவலர் இந்துமதி ராஜமாணி ஆகியோர் மேடையில்சிறப்புவிருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மாணவர்கள் நாட்டுப்பற்று நடனங்கள், பைரமிட் பயிற்சிகள், உடற்பயிற்சி அணிவகுப்பு

(ட்ரில்) மற்றும் சிந்தனையூட்டும் நாடகம் உள்ளிட்ட பல்வேறு

கலாசார நிகழ்ச்சிகளை வழங்கினர். சிறப்பு குழந்தைகளும் நாடகம் மற்றும் பைரமிட் பயிற்சியில் பங்கேற்று பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

விழாவின் இறுதியில், எஸ்ஆர்எம் நிறுவனம், சென்னை

இல் நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாத்வே இணை நிறுவனர் மற்றும் அறங்காவலர்கள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். இவ்விழாவில் குழந்தைகளுக்கு

இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், குழந்தைகள் அனைவரும் நாட்டுப்பற்று உணர்வோடு

விழாவை மகிழ்ச்சியாக

கொண்டாடி மகிழ்ந்தனர்.

# திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் 37 வது சாலை பாதுகாப்பு மாத விழிப்புணர்வு குறும்படத்தை கலெக்டர் ச.கந்தசாமி வெளியிட்டார்

## விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.



ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (27.01.2026) நடைபெற்ற 37-வது சாலை பாதுகாப்பு மாத விழாவில் விழிப்புணர்வு குறும்படத்தை வெளியிட்டு, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

நாம் அனைவரும். சாலை பாதுகாப்பு விதிமுறைகள் குறித்து தெரிந்து கவனமாகவும், வேக கட்டுப்பாடோடும் வாகனத்தை இயக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விபத்துக்களினால் உயிரிழப்பு மற்றும் உறுப்புக்கள்பாதிக்கப்படும்நிலை ஏற்படுகிறது. அதனை தடுக்கும் வகையில் தலைக்கவசம் (Helmet) அணிவது என்பது கட்டாய சட்டம் மட்டுமல்லாமல், உயிரைக் காப்பதற்கான பொறுப்பும் ஆகும்" என்பதை உணர்ந்து பொதுமக்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிந்து வாகனங்களை ஓட்ட வேண்டும்.எனவே வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் சாலை விதிமுறைகளை முறையாக பின்பற்றி கவனமாக வாகனத்தினை ஓட்ட வேண்டும் என தெரிவித்தார்.

அந்த வகையில் இன்றைய தினம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 6 கல்லூரிகளை சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கான நடத்தப்பட்ட விழிப்புணர்வு

போட்டிகளான கட்டுரை போட்டி. பேச்சு போட்டி, மற்றும் கவிதை போட்டிகளில் பங்கேற்ற முதல் மூன்று இடங்களை பிடித்த 9 மாணவியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். முன்னதாக சாலை பாதுகாப்பு விதிகள் குறித்த குறும்படத்தை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தன்.ஈரோடு மண்டல துணை வட்டாரப் போக்குவரத்து ஆணையர் டி.தாமோதரன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் (பெருந்துறை) எம்.பூங்குழலி, (கோபிசெட்டிபாளையம்) சேக் முகமது. உட்பட மோட்டார் வாகன ஆய்வாளர்கள், கல்லூரி மாணவியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவம்ச பண்டாரத்தார் முன்னேற்ற நலச்சங்கம் முதல் மாநில மாநாடு



தமிழ்நாடு கோவம்ச பண்டாரத்தார் முன்னேற்ற நலச் சங்கத்தின் முதல் மாநில மாநாடு, ஈரோடு அருகே சித்தோட்டில், உள்ள தனியார் திருமணம் மண்டபத்தில் நடைபெற்றது .

முப்பெரும் விழா

மாநில மாநாடு, நிர்வாகிகள் பதவி ஏற்பு, மாணவ,மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்குதல் என முப்பெரும் விழா, மாநிலத் தலைவர் திரு. கலையரசன் , மாநில பொதுச் செயலாளர் திரு. தர்மலிங்கம் , மாநில பொருளாளர் திரு. கல்யாணசுந்தரம் ஆகியோர் தலைமையில் திருப்பூர், ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல்,கோவை,நீலகிரி, சேலம், திருச்சி,கரூர், நாமக்கல்,கிருஷ்ணகிரி போன்ற அனைத்து மாவட்ட நிர்வாகிகள் பதவியேற்றனர் , தொடர்ந்து மாணவ, மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இந்த முதல் மாநில மாநாட்டை சிறப்பிக்க அஇஅதிமுக தங்கமணி எம்.எல்.ஏ., கே.சி. கருப்பண்ணன் எம்.எல்.ஏ., மொடக்குறிச்சி முன்னால் எம்.எல்.ஏ., சிவசுப்பிரமணி, முன்னால் எம்.எல்.ஏ., ராமலிங்கம், பிஜேபி வடக்கு மாவட்ட தலைவர் செந்தில், கொங்குநாடு மக்கள் கட்சி முன்னால் எம்.எல்.ஏ., தனியரசு, புதிய திராவிட கழகம் நிறுவனர் ராஜ்கவுண்டர், தமிழக நீதிக்கட்சி நிறுவனர் வாழவந்தி சரவணன், சித்தோடு பேரூராட்சி முன்னால் தலைவர் வரதராஜன்,தமிழ்நாடு சிவகுலத்தோர், அகில இந்திய பண்டாத்தார் சமுதாய கூட்டமைப்பு, தமிழ்நாடு வீரசைவ, மாநில யோகீஸ்வரர் , ஓபிசி ரைட்ஸ் சமுதாயப்பேரவை, அகில இந்திய ஜங்கம் முன்னேற்ற சங்கம்போன்றஅனைத்துக் கட்சி

அரசியல் தலைவர்கள் , நிர்வாகிகள், சமுதாயத் தலைவர்கள் , பேச்சாளர்கள் , கல்வியாளர்கள் , சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள் , மடாதிபதிகள் , போன்ற பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள் .

இவ்விழாவை நிறுவனத் தலைவர் பழனிச்சாமிதுவக்கஉரையாற்றி தொடங்கி வைத்தார் , தொடர்ந்து முக்கிய அரசியல் தலைவர்கள் , சமுதாயத் தலைவர்கள் , பேச்சாளர்கள் சிறப்புரை சிறப்புரையாற்றினார்கள்.

மாநாட்டில் தீர்மானங்கள்

இந்து சமய அறநிலைய துறை அமைப்பின் திருகோவில்களில்பரம்பரையாக பூஜை செய்யும் பூசாரிகளை அறங்காவலர் குழுவில் உறுப்பினராக நியமிக்க, கோவில்களில் பரம்பரையாக பூஜை மற்றும் பராமரிப்பு செய்யும் ஆண்டிபண்டாரத்தார் சமூக பூசாரிகளை வெளியேற்றிவிட்டு மாற்று சமூகத்தினரை நியமனம் செய்கின்றார் இதை மாற்றி பூஜை செய்ய அனுமதித்தல் ,

சமூக ஊடகங்கள் மூலம் நமது சமூகத்தை இழிவுபடுத்தும் சொற்களை, பழமொழிகள் செய்தி ஒளிபரப்பு துறை சார்பாக உத்தரவு வழங்க வேண்டும் என இதை போல் 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அதை இவர்களின் சமூகத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்க அரசுக்கு கோரிக்கைவைக்கமுடிவெடுக்கப்பட்டது.

மாநாடு காலையில் கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்கி நிகழ்ச்சிகள் நடைபெற்றது .

இந்த முப்பெரும் விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் மாநிலத் தலைவர் கலையரசன் நன்றி உரை கூறி சிறப்பிக்க விழா இனிதாக நடைபெற்றது.



ஈரோடு திண்டல், வேளாளர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 37 வது சாலை பாதுகாப்பு மாத விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (27.1.2026) சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை வெளியிட்டு, கல்லூரிகளை சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சு மற்றும் கவிதை ஆகிய விழிப்புணர்வு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.




கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பெரிய பட்டு கிராமத்தில் உள்ள சுடுகாட்டுப் பாதையில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அகற்றி அந்த சாலையில் ஜல்லி சாலை அமைக்க வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் சவப்படை ஊர்வலம் நடத்த திட்டமிட்டனர் அதற்கு போலீசார் அனுமதி மறுத்ததால் திருநாவலூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு 100க்கு மேற்பட்ட விவசாயிகள் கோரிக்கையை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை சங்கத்தின் மாவட்ட செயலாளர் வெங்கடேசன் தலைமை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழுக்க எழுப்பினர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் நேற்று (27.01.2026) “உலகம் உங்கள் கையில்” திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு கிழக்கு) வி.சி.சந்திரகுமார், (அந்தியூர்) ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ், திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரி முதல்வர் சந்திரசேகர் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோட்டில் கிரைம் கண்ட்ரோல் சமிதியின் சார்பில் 77வது குடியரசு தின விழா உற்சாகமாக நடைபெற்றது

ஈரோடு பெருந்துறை சாலையில் உள்ள கிரைம் கண்ட்ரோல் சமிதியின் நிர்வாக அலுவலகத்தில் நாட்டின் 77-வது குடியரசு தின விழா காலை 7:00 மணி அளவில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு ஈரோடு மாவட்டத் தலைவர் சங்கர்தலைமைதாங்கினார். மாவட்டச் செயலாளர் சஜித் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.



இந்த விழாவில் கோவை மண்டல ஒருங்கிணைப்பாளர் சதீஷ் குமார், தமிழக மாநில ஒருங்கிணைப்பாளர் வாசுதேவன் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக மாநிலத் தலைவர் அக்பர் அலி தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, அனைத்திந்திய வணிக மற்றும் குறுந்தொழில் முனைவோர் சங்கத்தின் தமிழக மாநிலத் தலைவர்டாக்டர்.பாலன் கலந்துகொண்டு விருதுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

மாநிலச் செயலாளர் பூங்குன்றன் நிகழ்ச்சி உரையாற்றினார். விழாவின் நிறைவாக மாவட்ட துணைத் தலைவர் மனோஜ் நன்றி கூறினார். நிகழ்ச்சி முழுவதையும் ஞானசேகர் ஒருங்கிணைத்தார். தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து கிரைம் கண்ட்ரோல் சமித்தியின் தமிழ்நாடு மாநில அளவில் 2025 ஆம் ஆண்டு சிறப்பாக சேவை செய்தமைக்கு பெருந்துறை தாலுகா செயலாளர் ஞானசேகரன் மற்றும் சுல்தான் ஆகியோர்களுக்கு மாநிலத் தலைவர் அக்பர் அலி விருது வழங்கி கௌரவித்தார். இதில் அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்டம் சூலூர் பகுதியில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வந்த கருப்புபட்டை மாணவர்களின் திறன் ஆய்வு போட்டி




கோவை மாவட்டம் சூலூர் பகுதியில் உள்ள தனியார் கல்லூரி, வளாகத்தில், பரத் கராத்தே அகாடமி சார்பாக இரண்டு நாட்கள், கராத்தே பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. இதில் கட்டா, மற்றும் குமித்தே தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சியாக நடை பெற்றது. இந்த பயிற்சியினை சர்வதேச விளையாட்டு வீரர் ப்ரனை ஷர்மா கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். தொடர்ந்து கோவையில்,

கடந்த ஒரு வார காலமாக, சாய் காய் டூ கராத்தே அமைப்புமூலமாக,கருப்புபட்டைமாணவர்களின் திறன் ஆய்வு போட்டிகள் நடைபெற்று வந்தது. இதில் திறம் பட தங்களது திறமைகளை வெளிபடுத்திய மாணவ மாணவியர்களுக்கு விருது வழங்கும் விழா, கோவை மாவட்டம் சூலூர் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கராத்தே இந்தியா அமைப்பின், தலைவர் ஹான்சி பரத் சர்மா, கராத்தே இந்தியா அமைப்பின் ஆர்கனைசிங் கமிட்டி சேர்மனும், பரத் அகாடமியின் சியிஓ சாய் ப்ரூஸ் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் அறிவழகன், பாலமுருகன், முருகானந்தம், மோகன், மோகன், முரளி, செல்வகுமார், வெள்ளிங்கிரி, ரவி சங்கர், சீதாலட்சுமி, மனோஜ், ப்ரகதீஷ்ராஜா, மற்றும் மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், என 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளான,நாகப்பட்டினம்,தஞ்சாவூர்,திருப்பூர், திண்டுக்கல், கோவை, காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் இருந்து பலவேறு மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் திறம் பட விளையாடி தங்களது திறமைகளை வெளிபடுத்திய மாணவ மாணவிகளுக்கு ப்ளாக் பெல்ட் சான்றிதழ்கள் வழங்க பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆட்சீஸ்வரர் திருக்கோயில் உட்பிரகாரத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஆறுமுக சுவாமிக்கு 108 பால்குட ஊர்வலம்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பக்கத்தில் தை கிருத்திகை முன்னிட்டு ஆறுமுக பெருமானுக்கு 108 பால்குடம் அபிஷேகம் நடைபெற்றது.

அச்சிறுப்பாக்கம் ஆட்சீஸ்வரர் கோவிலில் உள்ள ஸ்ரீ வள்ளி தேவசேனா ஆறுமுகப்பெருமான் 60 ஆம் ஆண்டு தை கிருத்திகை உற்சவம் முன்னிட்டு 108 பால்குடம் எடுத்தல் நிகழ்வு விமர்சையாக நடந்தது.

விழா முன்னதாக சங்கு தீர்த்த குளம் அருகே உள்ள பாலதண்டாயுதபாணி கோவிலில் இருந்து, விரதம் இருந்த பக்தர்கள் மேல தாளங்களுடன் 108 பால்குடங்கள் சுமந்து, மாட வீதி வழியாக வலம் வந்து, ஆட்சிஸ்வரர் கோவிலில் உட்பிரகாரத்தில் உள்ள ஸ்ரீ வள்ளி தேவசேனா ஆறுமுகப்பெருமான் ஆலயத்திற்கு வந்தடைந்தனர்.

ஆறுமுக பெருமானுக்கு பக்தர்கள் கொண்டு வந்த பால் குடத்தில் சுவாமிக்கு

அபிஷேகம் செய்தனர். அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு மூத்த அர்ச்சகர் சங்கர் சிவாச்சாரியார் தலைமையில் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ஜி.ஆர். ஜுவல்லரிவணிகவைசியர் ஜி.ராமலிங்கசெட்டியார் குடுப்பத்தினர் செய்திருந்தனர். இவ்விழாவில் ஆட்சீஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர்கள் ராஜலட்சுமி, வி.ரத்தினவேலு, க.கபாலி, து.மணிகண்டன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு ஆட்சீஸ்வரர் திருக்கோயில் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது.




ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில், பழங்குடியினர் நலத்துறையின் இயக்குநர் ச.அண்ணாதுரை (ம.தொ.ப.) அவர்கள் தலைமையில் பழங்குடியினர் நலப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்களுடன் உயர்கல்வி குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மகேஸ்வரி உள்ளார்.

# மகளிர் விடியல் பயண திட்டத்தில் புதிதாக 5 வழித்தடங்களில் 10 பேருந்துகள்




சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கை அதிகரிக்கும் மற்றும் உயர்த்தும் நோக்கில் 2021-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்த திட்டத்துக்கு தமிழக பெண்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த பேருந்துகளில் பயணிக்கும் பெண் பயணிகளின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. மகளிர் விடியல் பயண திட்டத்தின் சென்னையில் இன்று புதிதாக தொடங்கப்பட்டுள்ள 'மகளிர்மட்டும்-PINK BUS' இயக்கப்படும் வழித்தடங்களின் பட்டியலை சென்னை மாநகர போக்குவரத்து கழகம் வெளியிட்டு உள்ளது. இதன்படி, எண்ணூரில் இருந்து வள்ளலார் நகர் நோக்கி 56ஏ என்ற வழித்தடம் எண் கொண்ட பேருந்து இயக்கப்படும்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.